மு. ஸ்ரீநாகேஷ்,
மக்கள் தொடர்பு மேலாளர்

க.எண்.செகுவா /பகுதி 3/சிறப்பு/செய்தி/ 2009 நாள் 10.12.2009

பெறுநர்
ஆசிரியர்,
தினகரன் நாளிதழ்,
கச்சேரி சாலை,
சென்னை 600 004

அய்யா,

பொருள் : சென்னைக் குடிநீர் வாரியம் – பகுதி 3–சென்னை வியாசர்பாடியில் கழிவுநீர் தேங்கியுள்ளதால் காய்ச்சல் பரவுவதாக பொது மக்கள் சாலை மறியல் என்று வெளியான செய்தி – பதிலளித்தல்.

பார்வை: 15.11.2009 தேதியிட்ட தினகரன் நாளிதழ்.

/0/

பார்வையில் குறிப்பிட்டுள்ள தங்கள் நாளிதழில் சென்னை வியாசர்பாடி பகுதிகளில் பல இடங்களில் கழிவுநீர் கால்வாயில் அடைப்பு ஏற்பட்டு தண்ணீர் தேங்கியுள்ளதாகவும் அதனால் வைரஸ் காய்ச்சல் பரவுகிறது என்கிற செய்தியை எங்கள் கவனத்திற்கு கொண்டுவந்தமைக்கு எங்கள் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இது தொடர்பாக தெரிவிப்பது யாதெனில், தொடர்ந்து பெய்த கனமழை காரணமாக சென்னை வியாசர்பாடி பகுதியில் மழைநீர் வடிகால் வசதி இல்லாத 3வது பள்ளத் தெரு மற்றும் 4வது பள்ளத் தெருக்களில் மழைநீர் கழிவுநீர்கற்றமைப்பில் புகுந்ததின் விளைவாகவும் கழிவுநீரேற்று நிலையங்களில் மிகுதியான நீர்வரத்து இருந்ததாலும் மழை நீருடன் சேர்ந்து மணல், சேறு மற்றும் திடக் கழிவுகள் கழிவுநீர் அகற்றமைப்பில் புகுந்ததாலும் அத் தெருக்களில் கழிவுநீர்த் தேக்கமும், கழிவுநீர் வழிந்தோடுதலும் ஏற்பட்டது. இத்தெருக்களில் கழிவுநீரகற்றமைப்பில் இருந்த கசடுகள் அகற்றப்பட்டு தற்போது கழிவுநீர்த் தேக்கமோ வழிந்தோடுதல் இல்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எங்களுடைய மக்கள் பணியில் தங்களின் ஆதரவை தொடர்ந்து வழங்கக் கோரும்,

**மக்கள் தொடர்பு மேலாளர்**

**pdfMachine**
**Is a pdf writer that produces quality PDF files with ease!**
Produce quality PDF files in seconds and preserve the integrity of your original documents. Compatible across nearly all Windows platforms, if you can print from a windows application you can use pdfMachine.
Get yours now!